உடுமலைப்பேட்டை நகராட்சி

**21.07.2023 ம் தேதிய சாதாரணக்கூட்ட மன்ற நிரல்**

| வ.எண் | நகர் மன்றத் தீர்மான எண் | Subjects in Agenda | மன்றத்தின் முடிவு |
|---|---|---|---|
| 1 | 798 | உடுமலைப்பேட்டை நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் ஒப்பந்த அடிப்படையில் ஒரு வருட காலத்திற்கு கொசு ஒழிப்புப்பணியில் 58 DBC கொசுஒழிப்புப்பணியாளர்களை பணியில் ஈடுபடுத்திக்கொள்ள ஒப்பந்த முறையில் ஒப்பந்ததாரான M/S.துரை & கோ, ஜெயங்கொண்டம் என்பவருக்கு நகராட்சி ஆணையாளர் அவர்களின் உத்தரவு எண்:150/2020/எச்2 நாள்:31.03.2020 ன்படி மற்றும் நகர்மன்ற தீர்மான எண் 1141 நாள்: 31.03.2020ன் படி பணி உத்தரவு 01.04.2020 முதல் 31.03.2021 வரை மேற்படி நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது.<br>மேலும், 01.04.2021 முதல் 30.03.2022 வரை ஓராண்டிற்கு ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கிய அதே விலை விகிதத்தில் இரண்டாம் ஆண்டும் தூய்மைப்பணி செய்யும் பொருட்டு ஒப்பந்ததாரான M/S.துரை & கோ, ஜெயங்கொண்டம் நிறுவனத்திற்கு உத்தரவு வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வரப்பட்டது.<br>மேலும் 01.04.2022 முதல் 31.03.2023 வரை கால நீட்டிப்பு செய்து ஒப்பந்தப்புள்ளியில் வழங்கிய அதே விலை விகிதத்தில் பணிகள் மேற்கொள்ள பணி உத்தரவு வழங்கப்பட்டது. எனவே, மேற்படி நிறுவனத்திற்கு வழங்கிய பணி உத்தரவு காலம் 31.03.2023ம் தேதியுடன் முடிவடைவதால், பொதுசுகாதாரப்பணியின் அவசர அவசியம் கருதி ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளியில் வழங்கிய விலைவிகிதத்திலேயே மேலும் மூன்று மாதகாலத்திற்கு கால நீட்டிப்பு செய்து 01.04.2023 முதல் 30.06.2023 வரை கொசுஒழிப்புப்பணியாளர்களை கொண்டு பணிகள் மேற்கொள்வதற்கும், அதற்காகும் தோராய செலவினம் ரூபாய்..25.00 இலட்சத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :–</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பொது சுகாதாரப்பணியின் அவசர அவசியத்தை முன்னிட்டும், மன்றத்தின் அனுமதி எதிர்பார்த்தும் ஏற்கனவே பணி செய்து வரும் M/S.துரை & கோ, ஜெயங்கொண்டம் எனும் தனியார் நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கியதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்<br>( **ந.க.எண்:150/2021/H2)** | அனுமதிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது |
| 2. | 799 | உடுமலைப்பேட்டை நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு பயன்படுத்தும் வாகனங்களுக்கு | ஏற்கப்பட்டது |

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>தகுதிச்சான்று உள்ளிட்ட அனைத்து பணிகளுக்கு ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.7.00 லட்சத்திற்கு நகர்மன்ற தீர்மான எண் 790 நாள்: 05-05-2023 தேதியில் அனுமதிக்கப்பட்டுள்ளது.<br>அதன்படி குப்பை அள்ளப் பயன்படுத்தப்படும் வாகனம் எண் TN 78 X 5781 தகுதிச்சான்று பெறும் பொருட்டு, வாகனத்தில் உள்ள பழுதுகளை சரி செய்திட விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில், கீழ்கண்டுள்ள விபரப்படி 25/05/2023 தேதியில் விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது குறித்து மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><u>விபரம்</u>
<table>
<tr><th>வ.எண்</th><th>நிறுவனத்தின் பெயர்</th><th>தொகை</th></tr>
<tr><td>1</td><td>M/S.ஸ்ரீ குருவாயூரப்பன் ஆட்டோ மொபைல்ஸ், உடுமலைப்பேட்டை</td><td>ரூ.49,324/-</td></tr>
<tr><td>2</td><td>M/S.P.B.ஷெரிப் ஆட்டோ டிசல் ஓர்க்ஸ், பொள்ளாச்சி</td><td>ரூ.55,548/-</td></tr>
<tr><td>3</td><td>M/S.ஜே.டி & கோ, பொள்ளாச்சி</td><td>ரூ.61,242/-</td></tr>
</table>
<u>அலுவலக்குறிப்பு:-</u>மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள 3 விலைப்புள்ளிகளில் வ.எண்.1 ல் கண்டுள்ள M/S. ஸ்ரீ குருவாயூரப்பன் ஆட்டோ மொபைல்ஸ், உடுமலைப்பேட்டை அவர்களின் விலைப்புள்ளியினை ஏற்கலாம்.<br>(ந.க.எண்.2514/2022/எச்2)</td>
<td></td>
</tr>
<tr>
<td>3</td>
<td>800</td>
<td>உடுமலைப்பேட்டை நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ள பயன்படுத்தப்படும் இலகுரக வாகனம் TN 78R 6982-ல் உள்ள பழுதுகளை சரி செய்திட ஆகும் செலவினத்திற்கு நகர்மன்ற தீர்மானம் எண்: 672 நாள்: 16.02.2023 தேதியில் அனுமதிக்கப்பட்டு உள்ளது. அதன் படி மேற்கண்ட வாகனத்தில் உள்ள பழுதுகளை சீரமைத்திட விலைப்புள்ளி கோரப்பட்டதில் , கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.
<table>
<tr><th>வ.எண்</th><th>நிறுவனத்தின் பெயர் திருவாளர்கள்</th><th>விலைப்புள்ளி தொகை</th></tr>
<tr><td>1</td><td>M/s. குருவாயூரப்பன் ஆட்டோ மொபைல்ஸ், உடுமலைப்பேட்டை</td><td>ரூ.30,444/-</td></tr>
<tr><td>2</td><td>M/s.P.B.ஷெரிப் ஆட்டோ டிசல் ஓர்க்ஸ், பொள்ளாச்சி</td><td>ரூ.33,364/-</td></tr>
<tr><td>3</td><td>M/s.ஜே.டி.& கோ, பொள்ளாச்சி</td><td>ரூ.35,665/-</td></tr>
</table></td>
<td>அங்கீகரிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr><td></td><td></td><td>மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள விலைப்புள்ளிகளில் வ.எண் 1ல் கண்டுள்ள நிறுவனம் அளித்துள்ள குறைந்த விலைப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக்குறிப்பு:–</u><br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பொது சுகாதாரப்பணியின் அவசர அவசியத்தை முன்னிட்டும் மன்றத்தின் அனுமதியை எதிர்பார்த்தும் குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ள M/S.குருவாயூரப்பன் ஆட்டோ மொபைல்ஸ் உடுமலைப்பேட்டை என்ற நிறுவனத்திற்கு , பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்<br><br>(ந.க.எண்:0328/2023/எச்2)</td><td></td></tr>
<tr><td>4</td><td>801</td><td>உடுமலைப்பேட்டை நகராட்சி பொது சுகாதாரப்பிரிவுக்கு பயன்படுத்தப்படும் ஈப்பு வாகனம் TN 41V 9606–ல் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்திட ஆகும் உத்தேச செலவினத்திற் நகர்மன்ற தீர்மானம் எண்: 790 நாள்: 05.05.2023 தேதியில் அனுமதிக்கப்பட்டு உள்ளது.<br>அதன் படி மேற்கண்ட வாகனத்தில் உள்ள பழுதுகளை சீரமைத்திட விலைப்புள்ளி கோரப்பட்டதில் , கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.<br><u>விலைப்புள்ளி அளித்துள்ள விபரம்:–</u>
<table>
<tr><th>வ.எண்</th><th>நிறுவனத்தின் பெயர் திருவாளர்கள்</th><th>தொகை</th></tr>
<tr><td>1</td><td>M/s.CAI INDUSTRIES PVT LTD,<br>D.No: 279, Marapettai Street,<br>Udumalai Road,<br>Pollachi.</td><td>Rs. 16,395/–</td></tr>
</table>
மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள விலைப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக்குறிப்பு:</u><br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பொது சுகாதாரப்பணியின் அவசர அவசியத்தை முன்னிட்டும், மன்றத்தின் அனுமதியை எதிர்பார்த்தும் குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ள M/S.CAI INDUSTRIES PVT LTD ,POLLACHI என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>(ந.க. எண்:1155/2023/எச்2)</td><td>அங்கீகரிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>5</td><td>802</td><td>உடுமலைப்பேட்டை நகராட்சி பகுதியில் உள்ள அனைத்து வார்டுகளிலும் கால்வாய் மற்றும் ரோடு பகுதிகளில் செடி , கொடி , விஷசெடிகள் வளர்ந்து முட்புதர்களாகவும், பொது மக்களுக்கு மிகவும் இடைஞ்சலாக உள்ள நிலையிலும், தூய்மைப்பணியாளர்களை கொண்டு முழுமையாக அகற்ற முடியாத நிலையில், களைக்கொல்லி மருந்து மூலம் மேற்கண்ட செடிகளை அழித்திடவும், அதற்கு தேவைப்படும் 300 லிட்டர் களைக்கொல்லி மருந்து வாங்குவதற்கும் ஆகும் செலவினத்திற்கு நகர்மன்ற தலைவர் அவர்களிடம் 08–05–2023 தேதியில் முன் அனுமதி பெற்று , விலைப்புள்ளி கோரியதில் ,</td><td>அங்கீகரிக்கப்பட்டது.</td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
வரப்பெற்றுள்ள விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்.</th><th>நிறுவனத்தின் பெயர் & மற்றும் முகவரி</th><th>அளவு / பொருட்கள்</th><th>விலைப்புள்ளி தொகை + GST 18 %</th></tr>
<tr><td rowspan="2">1</td><td rowspan="2">Southern Fertilizers Chemicals<br>24 – A1 & A2<br>தாராபுரம் ரோடு<br>உடுமலைப்பேட்டை</td><td>1 லிட்டர் மருந்து</td><td>ரூ.695.00/-</td></tr>
<tr><td>50 கிலோ உப்பு</td><td>ரூ.1000.00/-</td></tr>
<tr><td rowspan="2">2</td><td rowspan="2">M/S ஸ்ரீ வாசவி அக்ரோ சர்வீஸ்,<br>225 A, பழனி ரோடு<br>உடுமலைப்பேட்டை</td><td>1 லிட்டர் மருந்து</td><td>ரூ.704.00/-</td></tr>
<tr><td>50 கிலோ உப்பு</td><td>ரூ.1100.00/-</td></tr>
</table>
மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் வ.எண். 1 ல் கண்டுள்ள Southern Fertilizers Chemicals, உடுமலைப்பேட்டை நிறுவனம் குறைவாக விலைப்புள்ளி வழங்கி உள்ளதை ஏற்கலாம்.
<u>அலுவலக்குறிப்பு</u>
அவசர அவசியத்தை முன்னிட்டு மன்றத்தின் அனுமதியை எதிர் நோக்கி பணி உத்திரவு வழங்கியதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்<br>1300/2023/ எச்2)
</td>
<td></td>
</tr>
<tr>
<td>6</td>
<td>803</td>
<td>
நகர்மன்றத் தீர்மான எண் 791 நாள் : 05-05-2023 தேதியின்படி, தினசரி உற்பத்தி ஆகும். மக்கம் கழிவுகளை நுண்உரக்குடில் மையத்தில் (MMC) உரமாக்குதல் பணிக்கு தேவையான EM Solution தயார் செய்வதற்கு தயிர்,வெல்லம்,தவிடு,உமி உள்ளிட்ட பொருட்கள் வாங்குவதற்கு ஆகும். உத்தேச செலவினம் ரூ.1.00 லலட்சம் பொது நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் அளித்துள்ளது.
மேற்கண்ட தீர்மானத்தின்படி , மேற்கண்ட பொருட்கள் வாங்கிட 12-05-2023 தேதியில் விலைப்புள்ளிகள் கோரியதில், வரப்பெற்றுள்ள விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண் .</th><th>நிறுவனத்தின் பெயர் & மற்றும் முகவரி</th><th>அளவு / பொருட்கள்</th><th>விலைப்புள்ளி தொகை</th></tr>
<tr><td rowspan="2">1</td><td rowspan="2">மயில் ஜோதி மாவு ஆயில் மில்,<br>தாராபுரம் ரோடு,RKR வீதி,</td><td>வெல்லம் 1 Kg</td><td>ரூ.60.00/-</td></tr>
<tr><td>தவிடு 50 Kg</td><td>ரூ.700.00/-</td></tr>
</table>
</td>
<td>அங்கீகரிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><td></td><td>உடுமலைப்பேட்டை</td><td>தயிர் 1 லிட்டர்</td><td>ரூ.70.00/-</td></tr>
<tr><td></td><td></td><td>உமி 50 Kg</td><td>ரூ.700.00/-</td></tr>
<tr><td>2</td><td>பாலாகிருஷ்ணா அரிசி மாவுமில்,<br>85, பெரியகடை வீதி,<br>உடுமலைப்பேட்டை</td><td>வெல்லம் 1 Kg</td><td>ரூ.65.00/-</td></tr>
<tr><td></td><td></td><td>தவிடு 50 Kg</td><td>ரூ.750.00/-</td></tr>
<tr><td></td><td></td><td>தயிர் 1 லிட்டர்</td><td>ரூ.80.00/-</td></tr>
<tr><td></td><td></td><td>உமி 50 Kg</td><td>ரூ.725.00/-</td></tr>
</table>
மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் வ.எண். 1 ல் கண்டுள்ள மயில் ஜோதி மாவு ஆயில் மில், உடுமலைப்பட்டை நிறுவனம் குறைவாக விலைப்புள்ளி வழங்கி உள்ளதை ஏற்கலாம்.<br>
<u>அலுவலக்குறிப்பு:-</u> அவசர அவசியத்தை முன்னிட்டு மன்றத்தின் அனுமதியை எதிர் நோக்கி பணி உத்திரவு வழங்கியதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>
( ந.க.எண். 1129/2023/எச்2 )
</td>
<td></td>
</tr>
<tr>
<td>7</td>
<td>804</td>
<td>
நகர்மன்றத் தீர்மான எண் 760 நாள் : 05-05-2023 தேதிய தீர்மானத்தின்படி , தினசரி உற்பத்தி ஆகும். பயன்பாடற்ற பிளாஸ்டிக் கழிவுகளை வளமீட்பு மையத்தில் (RRC) பேல் செய்வதற்கு தேவையான டேப்ரோல், கிளிப் வாங்கிட ஆகும் உத்தேச செலவீனம் ரூ.1.00/- இலட்சத்தினை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவுகள் செய்திட அனுமதிக்கப்பட்டு உள்ளது.<br>
மேற்கண்ட தீர்மானத்தின் படி டேப் ரோல் , கிளிப் வாங்கிட 11-05-2023 தேதியில் விலைப்புள்ளி கோரியத்தில் வரப்பெற்றுள்ள இரண்டு விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண் .</th><th>நிறுவனத்தின் பெயர் & விலாசம்</th><th>அளவு</th><th>விலைப்புள்ளி விபரம்</th></tr>
<tr><td>1</td><td>இரோஜந்திரா & கோ ஜெனரல்<br>282, தளி ரோடு<br>உடுமலைப்பேட்டை<br>திருப்பூர் ( மாவட்டம் ) - 642 126</td><td>( 12 mm ) 1 Roll</td><td>RS.240 /-</td></tr>
<tr><td></td><td></td><td>1 Kg (Clip)</td><td>RS.140/-</td></tr>
<tr><td>2</td><td>செல்வம் டிரேடர்ஸ்<br>76,பழனி ரோடு,<br>உடுமலைப்பேட்டை</td><td>( 12 mm ) 1 Roll</td><td>RS.260 /-</td></tr>
<tr><td></td><td></td><td>1 Kg</td><td>RS.155/-</td></tr>
</table>
</td>
<td>அங்கீகரிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><td></td><td></td><td>(Clip)</td><td></td></tr>
</table>
மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் வ.எண். 1 ல் கண்டுள்ள இராஜேந்திரா & கோ , உடுமலைப்பேட்டை நிறுவனம் குறைவாக விலைப்புள்ளி வழங்கி உள்ளதை ஏற்கலாம்.<br>
<u>அலுவலக்குறிப்பு:-</u><br>
அவசர அவசியத்தை முன்னிட்டு மன்றத்தின் அனுமதியை எதிர் நோக்கி பணி உத்திரவு வழங்கியதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>
(ந.க.எண்.1130/2023/எச்2)
</td>
<td></td>
</tr>
<tr>
<td>8</td>
<td>805</td>
<td>
இந்நகர்மன்றத் தீர்மான எண் 761 நாள் 05-05-2023 தேதியின்படி, பயன்பாடற்ற பிளாஸ்டிக் கழிவுகளை அரியலூர் சிமெண்ட் ஆலைகளுக்கு லாரி மூலம் அனுப்பி வைக்கவும், அதற்கு ஆகும் உத்தேச செலவீனம் ரூ.5.00 இலட்சம் பொது நிதியிலிருந்து செலவுகள் மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் அளித்துள்ளது.<br>
மேற்கண்ட தீர்மானத்தின்படி , பிளாஸ்டிக் கழிவுகளை லாரி மூலம் சிமெண்ட் ஆலைகளுக்கு அனுப்பி வைத்திட 10-05-2023 தேதியில் விலைப்புள்ளிகள் கோரியதில், வரப்பெற்றுள்ள விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எ ண்.</th><th>நிறுவனத்தின் பெயர் & விலாசம்</th><th>அளவு ( 12 Wheel )</th><th>விலைப்புள் ளி விபரம்</th></tr>
<tr><td>1</td><td>செந்தில் ஆண்டவர் டிரான்ஸ்போர்ட் ராஜாமில் ரோடு, லாரிபேட்டை, பொள்ளாச்சி</td><td>TRIP 1</td><td>RS.17,800/-</td></tr>
<tr><td>2</td><td>ஶ்ரீ காமாட்சியம்மன் டிரான்ஸ்போர்ட் 113, ராஜாமில் ரோடு,பொள்ளாச்சி</td><td>TRIP 1</td><td>RS.18,500 /-</td></tr>
</table>
மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் வ.எண். 1 ல் கண்டுள்ள செந்தில் ஆண்டவர் டிரான்ஸ்போர்ட் , பொள்ளாச்சி நிறுவனம் குறைவாக விலைப்புள்ளி வழங்கி உள்ளதை ஏற்கலாம்
</td>
<td>அங்கீகரிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | <u>**அலுவலக்குறிப்பு:–**</u> அவசர அவசியத்தை முன்னிட்டு மன்றத்தின் அனுமதியை எதிர் நோக்கி பணி உத்திரவு வழங்கியதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>**(ந.க.எண்.1091/2023/எச்2 )** | |
| 9 | 806 | இந்நகராட்சிக்குட்பட்ட குடியிருப்புகள் மற்றும் வணிக நிறுவனங்களில் இருந்து உற்பத்தி ஆகும் மக்கும் குப்பைகளை இந்நகராட்சி தூய்மை பணியாளர்கள் மூலம் பெற்று, **Micro Composting Centre**–க்கு (**MCC**) கொண்டு வரப்பட்டு, அங்கு உள்ள **Shreeding Machine** மூலம் குப்பைகளை நுண் துகள்களாக அரைத்து அங்கு உள்ள தொட்டியில் போடப்பட்டு, கலவை உரம் தயார் செய்யப்படுகிறது.<br>மேற்கண்ட பணிகளை இந்நகராட்சி பகுதிகளில் 4 இடங்களில் உள்ள **MCC** மூலம் செயல்படுத்தப்படுகிறது.<br>மேற்கண்ட 4 **Shreeding Machine** – ல் அவ்வப்பொழுது ஏற்படும் பழுதுகளை சீரமைத்திடவும், வருடாந்திர பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளவும் ஆகும் உத்தேச செலவினம் **ரூ.1.00** இலட்சத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக்குறிப்பு:–**_மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண்.1439/2023/எச்2)** | அனுமதிக்கப்பட்டது. |
| 10 | 807 | இந்நகராட்சிக்குட்பட்ட குடியிருப்பு மற்றும் வணிக நிறுவனங்களில் இருந்து உற்பத்தி ஆகும் பிளாஸ்டிக் கழிவுகளை தூய்மை பணியாளர்கள் மூலம் பெற்று, Resource Recovery Centre – க்கு (RRC) கொண்டு வரப்பட்டு , அங்கு உள்ள பேலிங் மிஷன் மூலம் 50 முதல் 70 கிலோ அளவுகளை கட்டுகளாக போடப்பட்டு லாரி மூலம் அரியலூர் சிமெண்ட ஆலைக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.<br>மேற்கண்ட பணிகளை இந்நகராட்சி பகுதிகளில் ராஜேந்திரா ரோடு மற்றும் கணபதிபாளையத்தில் உரக்கலவைக்கிடங்கில் உள்ள 5 மையத்தில் செயல்படுத்தப்படுகிறது. இவ்வாறு 4 பேலிங் மெஷினிகளில், தினமும் பணிகளை செய்வதால் , பராமரிப்பு பணிகள் மேற்கொள்வது அவசியம் ஆகிறது.<br>எனவே ஆண்டு பராமரிப்பு பணிகள் மற்றும் பழுதுகளை சரி செய்திட ஆகும் உத்தேச செலவினம் **ரூ.1.00** இலட்சம் நகராட்சி பொது நிதியில் இருந்து செலவீனம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக்குறிப்பு:–**_மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண்.1441/2023/எச்2)** | அனுமதிக்கப்பட்டது. |
| 11 | 808 | உடுமலைப்பேட்டை நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில், நிரந்தர தூய்மைப்பணியாளர்கள் 78 நபர்கள் பணியில் உள்ளனர், மேற்கண்ட பணியாளர்களுக்கு 2 ஆண்டுகளுக்கு ஒரு முறை | அனுமதிக்கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | | மழைக்கோட்டும், ஆண்டுக்கு ஒருமுறை காலணிகளும் வழங்கப்பட வேண்டும்<br>மேலும் இந்நகராட்சியில் பணிபுரியும் நிரந்தர ஓட்டுநர்களுக்கு 2 ஆண்டுகளுக்கு ஒரு முறை ஷீ ( Shoe ) வழங்கப்பட வேண்டும்.<br>எனவே மேற்கண்ட விபரப்படி பணியாளர்களுக்கு தேவைப்படும் பொருட்களை வாங்கி வழங்கிட ஆகும் உத்தேச செலவீனம் ரூ.2.00 இலட்சம் நகராட்சி பொது நிதியில் இருந்து செலவீனம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக்குறிப்பு:–_** மன்றம் அனுமதிக்கலாம்.<br>**( ந.க.எண்.1440/2023/எச்2)** | |
| 12 | 809 | உடுமலைப்பேட்டை நகராட்சி பகுதியில் உள்ள மரக்கழிவுகளை, கணபதிபாளையத்தில் உள்ள உரக்கலவைக்கிடங்கில் சேகரிக்கப்பட்டு , அங்கு உள்ள Wood Cutter Machine – மூலம் நுண் துகள்களாக அரைக்கப்படுகிறது.<br>மேற்கண்ட Wood Cutter Machine – ல் ஆண்டு பராமரிப்பு பணிகள் மேற்கொள்வது அவசியம் ஆகிறது. எனவே மேற்கண்ட மெஷினில் அவ்வப்பொழுது ஏற்படும் பழுதுகளை சரி செய்யவும், ஆண்டு பராமரிப்புக்கும் ஆகும் உத்தே செலவினம் ரூ.0.50 ஆயிரத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக்குறிப்பு:–_**மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண்.1442/2023/எச்2)** | அனுமதிக்கப்பட்டது. |
| 13 | 810 | உடுமலைப்பேட்டை நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில், தெருவில் சுற்றித்திரியும் நாய்களை பிடித்து இனப்பெருக்க அறுவை சிகிச்சை (Animel Birth Control) செய்திட பயன்படுத்தி வரும் TATA ACE வாகனம் எண் TN 78 W 4592 தகுதிச்சான்று பெறும் காலம் 09/10/2022 தேதியுடன் முடிவடைந்துள்ளது.<br>மேற்கண்ட வாகனத்தில் உள்ள பழுதுகளை சரிசெய்திட ஆகும் உத்தேச செலவினம் ரூ.50.00/– ஆயிரத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக்குறிப்பு:–_** மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண்.1428/2023/எச்2)** | அனுமதிக்கப்பட்டது. |
| 14 | 811 | உடுமலைப்பேட்டை நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில், திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு பயன்படுத்தப்படும் TATA ACE வாகனம் எண் TN 78 S 0166 தகுதிச்சான்று காலம் ஏப்ரல் 2023 மாதத்துடன் முடிவடைந்ததாலும், தகுதிச்சான்று (FC) பெறுவதற்கும், வாகனத்தில் உள்ள பழுதுகளை சரிசெய்திட ஆகும் உத்தேச செலவினம் ரூ.50.00/– ஆயிரத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக்குறிப்பு:–**மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | | ( ந.க.எண்.1386/2023/எச்2) | |
| 15 | 812 | நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.2023/SBM 2.0 நாள்:11/05/2023 தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு உடுமலைப்பேட்டை நகராட்சி பகுதிகளில் மொத்த கழிவுகளை 100 Kg மேல் உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் சொந்த பொறுப்பில் முறையாக அப்புறப்படுத்திக் கொள்ளும் அறிவிப்பினை மாவட்ட அளவில் தமிழ் மற்றும் ஆங்கிலப்பதிப்பில், தினசரி நாளிதழ்களில் ஒரு நாள் மட்டும் விளம்பரம் செய்திட ஆகும் உத்தேச செலவினத்தொகையை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக்குறிப்பு:-</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. அவசர அவசியத்தை முன்னிட்டு, மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தினசரி பத்திரிக்கையில் விளம்பரம் செய்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை அங்கீகரிக்கலாம்.<br>( **ந.க.எண்**.1551/2023/எச்2) | அங்கீகரிக்கப்பட்டது. |
| 16 | 813 | நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.27519-59/2021/P1 நாள்:28-03-2023 ஆம் தேதிய உத்திரவில், இந்நகராட்சிக்கு , நமக்கு நாமே திட்டத்தின் கீழ் Road Sweeping Machine (RSM) ரூ.55/- இலட்சத்திற்க்கு புதிதாக வாங்கி கொள்ள அனுமதிக்கப்பட்டு உள்ளது. மேலும் CSR Fund மூலம் நிதி திரட்டி மொத்தம் ரூ.77 /- லட்சம் ரூபாய்கு மேற்கண்ட வாகனம் வாங்கப்பட்டு, பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.<br>மேற்கண்ட வாகனத்தை தொடர்ந்து இயக்கும் போது, குறிப்பிட்ட கால இடைவெளியில் ஆயில் சர்வீஸ், உதிரி பாகங்கள் மாற்றுதல் உள்ளிட்ட பராமரிப்பு பணிகளை வாகனம் கொள்முதல் செய்யப்பட்ட நிறுவனத்தில் விட்டு பணிகளை மேற்கொள்ள வேண்டி உள்ளது.<br>எனவே மேற்கண்ட வாகனத்திற்குத் தேவையான உதிரிபாகங்கள் வாங்குவது, பழுது நீக்கம் செய்தல், ஆண்டு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல், அரசுக்கு செலுத்தப்பட வேண்டிய வரி இனங்கள், காப்பீடு உள்ளிட்ட பணிகளுக்கு ஆகும். உத்தேச செலவினம் ரூ.5.00/- லட்சத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக்குறிப்பு:-</u>** அவசர அவசியத்தை முன்னிட்டு மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி பணிகள் மேற்கொண்டமைக்கு அங்கீகாரம் கோரப்படுகிறது. | அங்கீகரிக்கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | | (ந.க.எண்.1822/20233/எச்2) | |
| 17 | 814 | உடுமலைப்பேட்டை நகராட்சியில் பயன்படுத்தப்பட்டு தற்பொழுது பயனற்ற நிலையில், உள்ள வாகனங்களை அரசாணை(நிலை) எண்: 2275 Home (Transport-E) Department நாள்: 10.10.90, அரசாணை(நிலை) எண்: 529 Home (Transport-IV) Department நாள்: 24.11.2021, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்: 20719/2022/MA1 நாள்: 08.08.2022 மற்றும் மத்திய மோட்டார் வாகன விதிகள் 2023 விதி எண் 52-ன் படியும் 15 வருடங்களுக்கு மேல் பயன்படுத்தப்பட்ட வாகனங்களை கழிவுநீக்கம் செய்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது.<br>எனவே இந்நகராட்சியில் பயனற்ற நிலையில் உள்ள TN 41X 8077, TN 78W 3497, TN78W 3846, TN 78W 4389 மற்றும் TN 41E 1750 ஆகிய பழைய வாகனங்களை கழிவு செய்திடவும், பத்திரிக்கையில் விளம்பரம் செய்திடவும், அதற்காகும் செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக்குறிப்பு:-</u>**மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்:78/2021/எச்2) | அனுமதிக்கப்பட்டது |
| 18 | 815 | உடுமலைப்பேட்டைநகராட்சிபொதுசுகாதாரப்பிரிவில்ஒப்பந்தஅடிப்படையில்கொசுஒழிப்புப்பணியில் 58 DBC கொசுஒழிப்புப்பணியாளர்களை பணியில் ஈடுப்படுத்திக்கொள்ள இந்நகர்மன்றதீர்மானஎண்:676 நாள்:16.02.2023 ன்படி 01.01.2023 முதல் 31.03.2023 வரைபணி நீட்டிப்பு செய்து உத்தரவிடப்பட்டது. பொதுசுகாதாரப்பணியின் அவசர அவசியம் கருதி 01.04.2023 முதல் 30.06.2023 வரை நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி நீட்டிப்பு செய்து பணிகள் நடைபெற்று வருகிறது.<br>மேலும் புதிதாக ஒப்பந்தம் கோரி நடவடிக்கை மேற்கொள்ள ஏதுவாக ஏற்கனவே பணி மேற்கொள்ளும் ஒப்பந்ததாரான M/S.துரை &கோ, ஜெயங்கொண்டம்நிறுவனத்திற்கு 03.07.2023 முதல் 31.08.2023 வரைஇரண்டுமாதங்கள்பணி மேற்கொள்ளஏற்கனவே ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கிய அதே விலைவிகிதத்திலேயே 58 கொசுஒழிப்புப்பணியாளர்களை கொண்டுபணிகள் மேற்கொள்வதற்கும் அதற்காகும்தோராய செலவினம் ரூபாய்.17.00 இலட்சத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்துசெலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக்குறிப்பு:</u>**பொதுசுகாதாரப்பணியின்அவசரஅவசியத்தை முன்னிட்டும்,மன்றத்தின்அனுமதிஎதிர்பார்த்தும், தற்சமயம் | அங்கீகரிக்கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | | ஒப்பந்தப்பணி செய்து வரும் **M/s.**துரைஅன்ட்கோ, ஜெயங்கொண்டம் எனும் தனியார் நிறுவனத்திற்கு பணிநீட்டிப்புவழங்கியதற்க்குமன்றம்அங்கீகரிக்கலாம்.<br><br>(ந.க.எண் 150/2021/எச்2) | |
| 19 | 816 | உடுமலைப்பேட்டை நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் ஒப்பந்த அடிப்படையில் நகராட்சி பள்ளிகளின் கழிவறைகள் தூய்மைப்பணிகள் மேற்கொள்வதற்கு 10 தூய்மைப்பணியாளர்களை பணியில் ஈடுப்படுத்திக்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண்:210 நாள்:05.07.2022 ன்படி 01.07.2022 முதல் 30.06.2023 வரை பணி நீட்டிப்பு செய்து உத்தரவிடப்பட்டது.<br>எனவே பொதுசுகாதாரப்பணியின் அவசர அவசியம் கருதி புதிதாக ஒப்பந்தம் கோரி நடவடிக்கை மேற்கொள்ள ஏதுவாக ஏற்கனவே பணி மேற்கொள்ளும் ஒப்பந்ததாரான M/S.துரை & கோ, ஜெயங்கொண்டம் நிறுவனத்திற்கு மேலும் இரண்டு மாதகாலத்திற்கு கால நீட்டிப்பு செய்து 03.07.2023 முதல் 31.08.2023 வரை இரண்டு மாதங்கள் பணி மேற்கொள்ள ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளியில் வழங்கிய அதே விலைவிகிதத்திலேயே தூய்மைப்பணியாளர்களை கொண்டு பணிகள் மேற்கொள்வதற்கும் அதற்காகும் தோராய செலவினம் ரூபாய்.2.60 இலட்சத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக்குறிப்பு:**பொதுசுகாதாரப்பணியின் அவசர அவசியத்தை முன்னிட்டும், மன்றத்தின் அனுமதி எதிர்பார்த்தும், தற்சமயம் ஒப்பந்தப்பணி செய்து வரும் **M/s.**துரை அன்ட் கோ, ஜெயங்கொண்டம் எனும் தனியார் நிறுவனத்திற்கு பணி நீட்டிப்பு வழங்கியதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.<br><br>**( ந.க.எண்:177/2021/H2)** | அங்கீகரிக்கப்பட்டது. |
| 20 | 817 | இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் பயன்படுத்தப்படும் JCB கனரக வாகனம் இயக்குவதற்கு ஒரு ஓட்டுநர் தனியார் வெளிக்கொணர்வு நிறுவனம் மூலமாக ஒப்பந்த அடிப்படையில் பணி மேற்கொள்ள விலைப்புள்ளி கோரியதில் **M/s.ஆர்.எஸ்.எம் & கோ,** உடுமலைப்பேட்டை எனும் நிறுவனம் வழங்கிய குறைந்தபட்ச விலைப்புள்ளியை ஏற்று, இந்நகர்மன்ற தீர்மான எண்: 155, நாள்: **05.07.2022ல்** அனுமதி வழங்கப்பட்டதினை பொருட்டு மேற்படி நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட இவ்வலுவக **05.07.2022ம்** தேதியிட்ட பணி உத்தரவு உடன்படிக்கை காலம் 30.06.2023ம் தேதியுடன் முடிவடைகிறது.<br>மேற்படி நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட பணி உத்தரவு காலம் 30.06.2023 ம் தேதியுடன் முடிவடைவதாலும், திருவாளர். | அங்கீகரிக்கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | | RSM & CO. உடுமலைப்பேட்டை நிறுவனத்தினரின் கடிதத்தில் ஏற்கனவே விலைப்புள்ளியில் வழங்கியுள்ள குறைபட்ச விலை ரூ.1100/- ல் மேலும் 6 மாதக்காலத்திற்கு பணி மேற்கொள்ள சம்மதம் தெரிவித்துள்ளதினாலும் **M/s.ஆர்.எஸ்.எம் & கோ,** உடுமலைப்பேட்டை நிறுவனத்தின் பணி உத்தரவினை 03.07.2023 முதல் 31.12.2023 வரை மேலும் 6 மாதக்காலத்திற்கு நீட்டிப்பு செய்யவும், அதற்காகும் செலவினம் ரூ.1.65 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக்குறிப்பு:**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.பொது சுகாதாரப்பணியின் அவசர அவசியத்தை முன்னிட்டும், மன்றத்தின் அனுமதி எதிர்பார்த்தும் ஏற்கனவே பணி செய்து வரும் M/s.**ஆர்.எஸ்.எம்** & **கோ,** உடுமலைப்பேட்டை எனும் ஒப்பந்ததாரருக்கு நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கியதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்<br>**(ந.க.எண்:1652/2021/H2)** | |
| 21 | 818 | உடுமலைப்பேட்டை நகராட்சியில் நகராட்சி எல்லைக்குட்பட்ட அரசு மற்றும் நகராட்சி பள்ளிகளில் உள்ள கழிவறைகளை சுத்தம் செய்தல் பணிகள் மேற்கொள்வதற்கு Out Sourcing அடிப்படையில் 10 தூய்மைப்பணியாளர்கள் M/s.துரை அன்ட் கோ, ஜெயங்கொண்டம், அரியலூர் ஒப்பந்ததாரரால் பணியில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர். ஒப்பந்ததாரரின் ஒப்பந்தகாலம் 31.08.2023 அன்று நிறைவு பெறுகின்றது.<br>மேலும் பள்ளிகளில் உள்ள கழிவறைகளை சுத்தம் செய்தல் தொடர்ந்து மேற்கொள்வது அவசியமாகின்றது. எனவே 10 தூய்மைப்பணியாளர்கள் Outsourcing அடிப்படையில் ஒரு வருடகாலத்திற்கு பணியில் ஈடுபடுத்திட, புதிதாக ஒப்பந்தம் கோரி நடவடிக்கை மேற்கொள்ளவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.23.00/- இலட்சம் நகராட்சி கல்வி / வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை குறித்து தினசரி பத்திரிக்கையில் விளம்பரம் செய்வதற்கு ஆகும் உத்தேச செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக்குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.<br>**( ந.க.எண்:001691/2023/எச்2)** | அனுமதிக்கப்பட்டது. |
| 22 | 819 | உடுமலைப்பேட்டை நகராட்சியில் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணி மேற்கொள்ள Out Sourcing அடிப்படையில் 58 DBC பணியாளர்கள் M/s.துரை அன்ட் கோ, ஜெயங்கொண்டம், அரியலூர் | அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | ஒப்பந்ததாரரால் பணியில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர் . ஒப்பந்ததாரரின் ஒப்பந்தகாலம் 31.08.2023 அன்று நிறைவு பெறுகின்றது.<br>மேலும் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை பணி தொடர்ந்து மேற்கொள்வது அவசியமாகின்றது. எனவே 40 DBC பணியாளர்கள் Outsourcing அடிப்படையில் ஆறு மாதகாலத்திற்கு பணியில் ஈடுபடுத்திட, புதிதாக ஒப்பந்தம் கோரி நடவடிக்கை மேற்கொள்ளவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.45.00/– லட்சம் நகராட்சி கல்வி/வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>மேலும் ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை குறித்து தினசரி பத்திரிக்கையில் விளம்பரம் செய்வதற்கு ஆகும் உத்தேச செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக்குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.<br>( ந.க.எண்:001692/2023/எச்2) | |
| 23 | 820 | உடுமலைப்பேட்டை நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ், தூய்மை பணியாளர்களை கொண்டு , வீடுகள் தோறும் குப்பைகளை தரம் பிரித்து வாங்குதல் பணிகளில் 100 சதவீதம் நடைமுறைப்படுத்திடும் பொருட்டு பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வண்ணம், குடியிருப்பு நல சங்கங்கள் , தொண்டு நிறுவனங்கள் , தன்னார்வலர்களை கொண்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் இது குறித்து பொதுமக்களிடம் நன்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருட்டு, பொது இடங்களில் விழிப்புணர்வு பேரணி, பேனர், பிளக்ஸ் வைத்து விளம்பரம் செய்திடவும், இதற்காகும் உத்தேச செலவினம் 0.75/- ஆயிரத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக்குறிப்பு:–**மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க .எண்.2353/2023 /எச்2) | அனுமதிக்கப்பட்டது |
| 24 | 821 | உடுமலைப்பேட்டை நகராட்சி காந்தி நகர், அண்ணா குடியிருப்பு, அனுசம் நகர் உள்ளிட்ட அனைத்து வார்டு முழுவதும் அதிகப்படியாக மரங்கள் உள்ளது . தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழை காலங்களிலும், புயல் காற்று சமயத்தில் மரங்கள் சாய்ந்து, பொதுமக்களுக்கு இடையூறு விளைவிக்க வாய்ப்பு உள்ளது.<br>எனவே மேற்கண்ட சமயத்தில் பவர்ஷா இயந்திரம் [Powersha] கொண்டு, உடனுக்குடன் அப்புறப்படுத்திட ஏதுவாக 5 பவர்ஷா இயந்திரம் வாங்கிட ஆகும் உத்தே செலவினம் ரூ.0.50 /– ஆயிரத்தை நகராட்சி வருவாய் நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக்குறிப்பு:–** மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | (ந.க .எண்.1642/2023 /எச்2) | |
| 25 | 822 | உடுமலைப்பேட்டை நகராட்சி, பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு பயன்படுத்தப்படும் 35 தள்ளுவண்டிகள் [ **Pushcart** ] பழுது ஏற்பட்டு, பயன்படுத்திட இயலாத சூழ்நிலை உள்ளது. நகரின் 20 வார்டுகளில் குறுகலான சந்துகள் அதிகம் உள்ளதால் வீடு வீடாக குப்பைகள் சேகரம் செய்ய மேற்படி [ **Pushcart** ] வண்டிகளின் பயன்பாடு அத்தியாவாசயமாக கருதப்படுகிறது.<br>எனவே மேற்கண்ட தள்ளுவண்டிகளில் உள்ள பழுதுகளை சரி செய்திடவும், உதிரிபாகங்கள் மாற்றம் செய்திட ஆகும் உத்தேச செலவினம் ரூ.2.00 /– இலட்சத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக்குறிப்பு:–** மன்றம் அனுமதிக்கலாம்.<br>( **ந.க.எண்.2259/2023/எச்2)** | அனுமதிக்கப்பட்டது |
| 26 | 823 | உடுமலைப்பேட்டை நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிகளில் 33 வார்டுகளிலும் உற்பத்தியாகும் மக்கும் கழிவுகள் (MCC) நுண்உரக்குடில் மையத்திற்கும் மக்காத கழிவுகள் (RRC) வளமீட்பு மையத்திற்கும் எடுத்து சென்று திடக்கழிவு மேலாண்மை பணிகள் நடைபெற்று வருகிறது.<br>மழைகாலங்களில் நகரில் உற்பத்தியாகும் கழிவுகளை தரம் பிரித்து முறையாக கையாள இயலாத கழிவுகளான பேப்பர் கழிவுகள், கால்வாய்கழிவுகள், துணிகள், பெட்/சீட்கவர் ஆகியன நகராட்சி உரக்கலவைக்கிடங்கில் சேகரிக்கப்பட்டு வருகிறது. சேகரிக்கப்பட்ட கழிவுகளை மறுசூழற்சி செய்ய இயலாததால் பாறைகுழிகள் மற்றும் தாழ்வான பள்ளம் பகுதியில் நிரப்பப்பட வேண்டிய சூழ்நிலை உள்ளது.<br><br>எனவே பொது சுகாதார அவசர அவசியம் கருதி நகராட்சி உரக்கலவைக்கிடங்கில் பயன்பாடற்ற கழிவுகளை தேவையான கனரக வாகனங்களான JCB, Tipper, Hittachi ஆகிய வாகனங்கள் மூலம் கழிவுகளை அகற்றிடும் பணிகள் மேற்கொள்ள ஆகும் தோராய செலவினம் ரூ.3.00/– இலட்சத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக்குறிப்பு:–** மன்றம் அனுமதிக்கலாம்.<br>( **ந.க.எண்.2368/2023/எச்2)** | அனுமதிக்கப்பட்டது |
| 27 | 824 | இந்நகராட்சியில் திரு.பா. வாசுதேவன் என்பவர் மின்கம்பியாளராகப் பணிபுரிந்து 31.03.2023 அன்று சுயவிருப்ப | அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr><td></td><td></td><td>ஓய்வு பெற்று விட்டார். அவர் பணிபுரிந்த காலத்தில் அவருடைய ஊதியத்தில் பிடித்தம் செய்த தொகைகள் கீழ்க்கண்டவாறு.
<table>
<tr><td>1</td><td>சிறப்புசேமநலநிதி அசல்</td><td>:</td><td>ரூ.2,960.00</td></tr>
<tr><td>2</td><td>சிறப்புசேமநலநிதி வட்டி</td><td>:</td><td>ரூ.25,265.00</td></tr>
<tr><td>3</td><td>நிர்வாக பங்குத்தொகை</td><td>:</td><td>ரூ.10,000.00</td></tr>
<tr><td></td><td>மொத்தம்</td><td>:</td><td>ரூ.38,225.00</td></tr>
</table>
மேற்படித்தொகை ரூ. 38,225/- அன்னாருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலகக்குறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம்.<br>
(ந.க.எண் 932/2023/பி6)</td><td></td></tr>
<tr><td>28</td><td>825</td><td>திரு.வி. தங்கராஜ், உதவி செயற்பொறியாளர் ஈரோடு மாநகராட்சியில் அயற்பணிபுரிந்து வயது முதிர்வின் காரணமாக 31.12.2022 பி.ப பணியிலிருந்து ஓய்வு பெற்று விட்டார். அவருக்கு ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அவர்களின் கடிதம் ந.க.எண் 38316/2022/ப்1 நாள் 07.01.2023ல் திரு.வி. தங்கராஜ், உதவி செயற்பொறியாளர் ஓய்வு காலத்திற்கு பிறகு வழங்கப்படும் ஓய்வூதியப்பயன்கள், ஈட்டிய ஈட்டா விடுப்பு கணக்கு முடித்து தொகை வழங்குதல், சிறப்பு சேமநலநிதித் தொகை கணக்கு முடித்தல், பொது சேமநலநிதி, ஓய்வு பெற்ற பின் சொந்த ஊருக்குச் செல்வதற்கான பயணப்படி ஆகியவைகளை கணக்கிட்டு வழங்குவதற்கு உடுமலைப்பேட்டை நகராட்சி மூலம் பெற்றுக்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டுள்ளதன்படி அன்னார் பணிபுரிந்த காலத்தில் அவருடைய ஊதியத்தில் பிடித்தம் செய்த தொகைகள் கீழ்க்கண்டவாறு.
<table>
<tr><td>1</td><td>சிறப்புசேமநலநிதி அசல்</td><td>:</td><td>ரூ.2960.00</td></tr>
<tr><td>2</td><td>சிறப்புசேமநலநிதி வட்டி</td><td>:</td><td>ரூ.34,853.00</td></tr>
<tr><td>3</td><td>நிர்வாக பங்குத்தொகை</td><td>:</td><td>ரூ.10,000.00</td></tr>
<tr><td></td><td>மொத்தம்</td><td>:</td><td>ரூ.47,813.00</td></tr>
</table>
மேற்படித்தொகை ரூ. 47,813/- அன்னாருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலகக்குறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம்.<br>
(ந.க.எண் 487/2023/பி6)</td><td>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>29</td><td>826</td><td>இந்நகராட்சியில் திரு.கே. செந்தில்குமார் என்பவர் குடிநீர் பணி மேற்பார்வையாளராகப் பணிபுரிந்து 31.12.2023 அன்று சுய விருப்ப</td><td>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

<table>
<tr><td></td><td></td><td>ஓய்வு பெற்று விட்டார். அவர் பணிபுரிந்த காலத்தில் அவருடைய ஊதியத்தில் பிடித்தம் செய்த தொகைகள் கீழ்க்கண்டவாறு.<br>
<table>
<tr><td>1</td><td>சிறப்புசேமநலநிதி அசல்</td><td>:</td><td>ரூ.2,960/-</td></tr>
<tr><td>2</td><td>சிறப்புசேமநலநிதி வட்டி</td><td>:</td><td>ரூ.10,297/-</td></tr>
<tr><td>3</td><td>நிர்வாக பங்குத்தொகை</td><td>:</td><td>ரூ.10,000/-</td></tr>
<tr><td></td><td>மொத்தம்</td><td>:</td><td>ரூ.23,257/-</td></tr>
</table>
மேற்படித்தொகை ரூ.23,257/- அன்னாருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலகக்குறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம்.<br>
(ந.க.எண் 111/2021/பி6)</td><td></td></tr>
<tr><td>30</td><td>827</td><td>இந்நகராட்சியில் திரு.ஆர். துரைராஜ் என்பவர் மின்கண்காணிப்பாளராகப் பணிபுரிந்து 30.04.2023 அன்று வயது முதிர்வின் காரணமாக ஓய்வு பெற்று விட்டார். அவர் பணிபுரிந்த காலத்தில் அவருடைய ஊதியத்தில் பிடித்தம் செய்த தொகைகள் கீழ்க்கண்டவாறு.<br>
<table>
<tr><td>1</td><td>சிறப்புசேமநலநிதி அசல்</td><td>:</td><td>ரூ.2,960/-</td></tr>
<tr><td>2</td><td>சிறப்புசேமநலநிதி வட்டி</td><td>:</td><td>ரூ.25,540/-</td></tr>
<tr><td>3</td><td>நிர்வாக பங்குத்தொகை</td><td>:</td><td>ரூ.10,000/-</td></tr>
<tr><td></td><td>மொத்தம்</td><td>:</td><td>ரூ.38,400/-</td></tr>
</table>
மேற்படித்தொகை ரூ.38,400/- அன்னாருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலகக்குறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம்.<br>
(ந.க.எண் 1202/2021/பி6)</td><td>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>31</td><td>828</td><td>இந்நகராட்சியில் திரு.மாரன்/பழனி என்பவர் தூய்மைப் பணியாளராகப் பணிபுரிந்து 30.06.2023 அன்று வயது முதிர்வின் காரணமாக ஓய்வு பெற்று விட்டார். அவர் பணிபுரிந்த காலத்தில் அவருடைய ஊதியத்தில் பிடித்தம் செய்த தொகைகள் கீழ்க்கண்டவாறு.<br>
<table>
<tr><td>1</td><td>சிறப்புசேமநலநிதி அசல்</td><td>:</td><td>ரூ.2,960/-</td></tr>
<tr><td>2</td><td>சிறப்புசேமநலநிதி வட்டி</td><td>:</td><td>ரூ.7,431/-</td></tr>
<tr><td>3</td><td>நிர்வாக பங்குத்தொகை</td><td>:</td><td>ரூ.10,000/-</td></tr>
<tr><td></td><td>மொத்தம்</td><td>:</td><td>ரூ.20,391/-</td></tr>
</table>
மேற்படித்தொகை ரூ.20,391/- அன்னாருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலகக்குறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம்.<br>
(ந.க.எண் 1979/2023/பி6)</td><td>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>32</td><td>829</td><td>இந்நகராட்சியில் திருமதி.சாந்தி / சக்திவேல் என்பவர் தூய்மைப் பணியாளராகப் பணிபுரிந்து 30.06.2023 அன்று வயது முதிர்வின்</td><td>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

<table>
<tr><td></td><td></td><td>காரணமாக ஓய்வு பெற்று விட்டார். அவர் பணிபுரிந்த காலத்தில் அவருடைய ஊதியத்தில் பிடித்தம் செய்த தொகைகள் கீழ்க்கண்டவாறு.<br><table><tr><td>1</td><td>சிறப்புசேமநலநிதி அசல்</td><td>:</td><td>ரூ.2,960/-</td></tr><tr><td>2</td><td>சிறப்புசேமநலநிதி வட்டி</td><td>:</td><td>ரூ.10,722/-</td></tr><tr><td>3</td><td>நிர்வாக பங்குத்தொகை</td><td>:</td><td>ரூ.10,000/-</td></tr><tr><td></td><td>மொத்தம்</td><td>:</td><td>ரூ.23,682/-</td></tr></table>மேற்படித்தொகை ரூ.23,682/- அன்னாருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண் 1980/2023/பி6)</td><td></td></tr>
<tr><td>33</td><td>830</td><td>இயக்குநர், மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9 அலுவலகம் மூலம் வெளியிட்ட செய்தி வெளியீடு எண் 731 நாள் 18.04.2023 ல் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளின் சொத்து உரிமையாளர்கள் நகராட்சி மற்றும் பேரூராட்சிகளுக்கு செலுத்த வேண்டிய சொத்துவரியினை ஏப்ரல் 30ஆம் தேதிக்குள் செலுத்தி 5% ஊக்கத்தொகை பெறலாம் என தெரிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி கடந்த 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998-க்கு திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு. 13.04.2023 முதல் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் விதிகள் 2023, நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998, பிரிவு 84 (1) ல் . Five percent of the net property tax payable by an assessee, subject to a maximum of five thousand rupees shall be granted as an incentive, who has paid the property tax within thirty days from the date of commencement of the half-year. அதன்படி, சொத்து உரிமையாளர்கள் தங்களது 2023-24 ஆண்டின் முதல் அரையாண்டிற்கான சொத்துவரியினை ஏப்ரல் 30-ம் தேதிக்குள் செலுத்தும் சொத்து உரிமையாளர்கள் ஊக்கத்தொகை பெற தகுதியுடையவர் ஆகிறார்கள்.<br><br>சொத்து உரிமையாளர்கள் சொத்துவரியினை செலுத்த மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிகள் மூலம் பல்வேறு வகைகளான விழிப்புணர்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன்படி, சொத்து உரிமையாளர்களுக்கு குறுந்தகவல் அனுப்புதல், வாகனங்களில் பொருத்தப்பட்டுள்ள ஒலிப்பெருக்கி மூலம் அறிவிப்புகள் வாயிலாக விழிப்புணர்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.</td><td>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | சொத்து உரிமையாளர்கள், சொத்து வரியினை தங்களது இல்லம் தேடி வரும் வரிவசூலிப்பாளர்கள் மாநகராட்சி, மண்டல அலுவலகங்கள், நகராட்சி அலுவலகங்கள் மூலம் அமைந்துள்ள வசூல் மையங்கள் மற்றும் பேரூராட்சி அலுவலக வசூல் மையங்கள் ஆகியவற்றில் கடன் மற்றும் பற்று அட்டை காசோலை மற்றும் வரைவோலை மூலமாகவும் டிஜிட்டல் பரிவர்த்தனை வாயிலாக சொத்துவரி செலுத்தவும் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.<br>நகராட்சி எல்லைக்குட்பட்ட சொத்து, உரிமையாளர்கள் தங்களது சொத்துவரியினை ஏப்ரல் 30 தேதிக்குள் செலுத்தி ஊக்கத்தொகையினை பெற்றிடுமாறும் நகராட்சி பகுதிகளில் மேற்கொள்ளப்படும் வளர்ச்சி பணிகளில் தங்களது பங்களிப்பினை வழங்கிடுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது. எனவே உடுமலைப்பேட்டை நதராட்சிக்கு எல்லைக்குட்பட்ட வார்டு –1 முதல் 33 வரை உள்ள அனைத்து பகுதிகளிலும் விழிப்புணர்வு மேற்கொள்ளும் நோக்கில் மணி ஆட்டோ மூலம் விளம்பரம் செய்யவும், செய்தித்தாள் மற்றும் நோட்டீஸ் அச்சிட்டு விநியோகம் செய்யவும், மற்றும் மக்கள் கூடும் முக்கியமான பகுதியில் பேனர்கள் மூலம் விழிப்புணர்வு மற்றும் தொலைபேசியில் குறுஞ்செய்தியாக விழிப்புணர்வு செய்யவும் ஆகும் தோராய செலவினத்திற்கு (ரூ.2.50லட்சம்) மன்றத்தின் முன் அனுமதி வேண்டப்படுகிறது. மற்றும் செய்தி வெளியீட்டு எண்.731 நாள்:18/04/2023 யை மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:– செலவினத்திற்கு மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந,க.எண்:1658/2020/அ1) | |
| 34 | 831 | இந்நகராட்சிக்குச் சொந்தமான வாரச்சந்தையினை வினோத்குமார் என்பவர் ஏலத்தில் எடுத்து நடத்தி வந்துள்ளார் இவரின் குத்தகை உரிமத்தின் இரண்டாம் ஆண்டின் குத்தகை காலம் 30.03.2023 உடன் முடிவடைந்த நிலையில் 01.04.2023 லிருந்து மூன்றாம் ஆண்டிற்கு 5% சதவீதம் வாடகை உயர்வு செய்து அவ்வாண்டிற்கு ஏற்கனவே செலுத்திய வாடகை தொகை போக மீதமுள்ள தொகை ரூ.1,02,31,498ஐ ஏழு தினங்களுக்குள் செலுத்தக்கோரி இந்நகராட்சி மூலம் அறிவிப்பு தெரிவிக்கப்பட்டது.<br>குத்தகைதாரர் 11.05.2023ஆம் தேதிய கடிதத்தில் 05.05.2023ஆம் தேதிய நகர் மன்ற கூட்டத்தில் வாரச்சந்தையின் குத்தகை தொகையினை குறைத்துதரக் கோரியதை நகர் மன்றத்தால் நிராகரிக்கப்பட்டு மூன்றாம் ஆண்டிற்கு மொத்தம் செலுத்த வேண்டியா தொகை ரூ.1,10,52,563/–ஐ உடனே தாமதமின்றி குத்தகைதாரர் செலுத்தப்படும் பட்சத்தில் | அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | இவ்வாண்டிற்கு குத்தகை இனத்தினை புதுபித்து உத்தரவு வழங்க ஆட்சேபனை ஏதும் இல்லையென தெரிவிக்கப்பட்டது.<br>எனவே மேற்கண்ட வாரச்சந்தையின் மூன்றாம் ஆண்டின் முழுத்தொகையினை ஏழுதினங்களுக்குள் நகராட்சி அலுவலகத்தில் செலுத்தப்பட்டு சந்தையினை புதுப்பித்து உத்திரவு பெற்று நடத்திக் கொள்ளுமாறு அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டும் நாளது தேதிவரை எவ்வித தொகையும் அனுப்பப்படாமல் தற்போது குத்தகைதாரர் மீண்டும் கால அவகாசம் கேட்டு மேலும் 15 நாட்களுக்குள் சந்தைக்குரிய பாதித்தொகையினை செலுத்துவதாகவும் மீதமுள்ள தொகையினை நான்கு மாதத்திற்குள் செலுத்தப்படுவதாகவும் கடிதம் கொடுத்துள்ளார். இது ஏலவிதிமுறைகளுக்கு மாறாக இருக்கின்ற காரணத்தினால் குத்தகைதாரருக்கு பல முறை அறிவிப்பு நோட்டீஸ் வழங்கியும் குத்தகை தொகை முழுவதையும் ஒரே தவணையில் செலுத்தக்கூடிய முகாந்திரம் இல்லாத காரணத்தினால் வாரச்சந்தையினை குத்தகைதாரரிடமிருந்து எடுத்து 16.05.2023 நள்ளிரவு 12 மணிமுதல் அலுவலகத்தின் மூலம் துறை ரீதியாக வசூல்செய்ய உத்திரவு பெறப்பட்டு கீழ்கண்ட தேதிகளில் துறை ரீதியாக வசூலிக்கப்பட்டது.<br><br>வ. எண் \| வசூல் நாள் \| தொகை ரூ<br>1 \| 17.02.2023 \| 25,150/-<br>2 \| 18.05.2023 \| 23,520/-<br>3 \| 19.05.2023 \| 26,960/-<br>4 \| 20.05.2023 \| 23,030/-<br> \| மொத்தம் \| 98,660/-<br><br>இந்நிலையில் மேற்படி தினசரி சந்தை குத்தகைதாரர் திரு.பி.வினோத்குமார் என்பவர் துறை ரீதியாக நகராட்சி மூலம் வசூல் செய்ததற்கு எதிராக சென்னை உயர்நிதிமன்றத்தில் வழக்கு WP 15730/2023 நாள் 16.05.2023 யில் வழக்கு தொடர்ந்து உள்ளார். இதனைத் தொடர்ந்து இடைக்கால தடை உத்தரவு 18.05.2023ல் உயர்நீதி மன்றத்தில் பெறப்பட்டு அதன் விபரத்தினை 19.05.2023ன் தனது கடிதத்தில் தடையினை பெற்றிருப்பதால் 31.07.2023ஆம் தேதிகளில் மூன்றாம் ஆண்டில் குத்தகைதொகை ரூ.1,02,52,563/-ஐ செலுத்திவிடுவதாகவும் நீதிமன்ற தடையாணையை அலுவலகத்தில் சமர்பித்துள்ளார்.<br><br>தடையாணையை சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திரு.பி.ஆனந்த் அவர்களின் சட்டக்கருத்துரு கேட்டு | |

| | | | |
|---|---|---|---|
| | | ஒப்பதலுக்காக 19.05.2023 அன்று அனுப்பட்டது. அரசு வழக்கறிஞர் 20.05.2023ஆம் தேதிய தனது சட்டக் கருத்துருவில் நீதிமன்ற உத்தரவின்படி குத்தகைதாரர் திரு.பி.வினோத்குமார் 31.07.2023 ஆம் தேதிக்கு மூன்றாம் ஆண்டின் குத்தகைத்தொகை ரூ.1,02,52,563/-ஐ செலுத்தப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டிருந்ததால் வாரச்சந்தையினை குத்தகைதாரரின் வசம் ஒப்படைக்கலாம் என தெரிவித்து தனது சட்டக்கருத்துகளை அனுப்பியுள் ளார்.<br>எனவே நீதிமன்ற உத்தரவின்படியும் வழக்கறிஞரின் சட்டக்கருத்துரு ஒப்புதலின்படியும் வாரச்சந்தையினை நகராட்சி பணியாளர்களை கொண்டு 16.05.2023ஆம் தேதி முதல் வசூலிக்கப்பட்டிருந்ததை இவ்வலுவலக ந.க.எண். 8510/2020/அ2 நாள்:20.05.2023 செயல்முறை உத்தரவின்படி திரு.பி.வினோத்குமார் குத்தகைதாரரின் வசமே வாரச்சந்தையினை 20.05.2023 நள்ளிரவு 12 மணி முதல் ஒப்படைக்கப்பட்டது, மேலும் இவ்வழக்கின் உத்தேச செலவினத்திற்கு (ரூ.1.00 இலட்சம்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:-<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. திரு.பி.ஆனந்த் வழக்கறிஞர் அவர்களுக்கு வழக்கிற்கான தொகையினை வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண் 8510/2020/அ2)** | |
| 35 | 832 | உடுமலைப்பேட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட, சி.கே. ரோடு - கச்சேரி வீதி சந்திப்பு, தளி ரோடு ஊராட்சி ஒன்றிய அலுவலகம் சாலை சந்திப்பு அருகில், பழனி ரோடு காந்தி நகர் சாலை சந்திப்பு மற்றும் தாராபுரம் ரோடு – புறவழிச்சாலை அருகில் உள்ள பேருந்து நிறுத்த நிழற்குடை அருகில் பேருந்துகள் நிற்பதால் பொதுமக்களுக்கும் போக்குவரத்திற்கும் இடையூறு ஏற்படுகிறது. இதனால், பொதுமக்கள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகிறார்கள். எனவே, பொதுமக்களின் நலன் கருதி மேற்கண்ட இடங்களில் உள்ள, நிழற்குடைகளை சந்திப்பிலிருந்து சுமார் 60 மீட்டர் தூரத்திற்கு மாற்றி அமைக்கும் பட்சத்தில் போக்குவரத்து நெரிசல் தவிர்க்க இயலும். எனவே, மேற்கண்ட இடங்களில் உள்ள பேருந்து நிழற்குடைகளை மாற்றி அமைக்க ஆகும் செலவினத்தை தன்னார்வாளர்களின் பங்களிப்புடன் பணி மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக் குறிப்பு</u>** :- மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண் 2340/2023/எப்1)** | அனுமதிக்கப்பட்டது |
| 36 | 833 | உடுமலைப்பேட்டை நகராட்சிக்குட்பட்ட பொள்ளாச்சி சாலையில் மையத்தடுப்பு விளக்குகள் உள்ளது. இந்நிலையில் மாரியம்மன் கோவில் தேர்திருவிழாவை முன்னிட்டு அந்த சாலையில் உள்ள | அங்கீரிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | சென்டர் மீடியன் கற்களை நெடுஞ்சாலை துறையினர் அப்புறபடுத்தினர் இதனால் சென்டர் மீடியன் கற்கள் மீண்டும் மின்கம்பங்கள் ஒரே சீராக இல்லாததால் விபத்துகள் ஏற்படும் அபாயம் உள்ளது. எனவே செண்டர் மீடியன் கற்களை சுமார் 500 மீட்டர் நிளத்திற்கு தெருவிளக்கு கம்பங்களை ஒட்டி நேராக அமைக்க வேண்டும். மேற்கண்ட பணியினை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.48000/-ஆகும். மேற்கண்ட சாலை பொள்ளாச்சி செல்லும் பிரதான சாலையாக உள்ளதால் விபத்துகளை தவிர்க்கும் வண்ணம் மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் பணியின் அவசர அவசியம் கருதி மேற்படி பணியினை ஒப்பந்ததாரர் திருவாளர்.ஆர்.எஸ்.எம் அன் கோ, உடுமலைப்பேட்டை என்பவரிடம் ஒப்படைப்பு பணியாக மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>பணியின் அவசர அவசியம் கருதி பணியின்அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கியும் வேலை உத்தரவு வழங்கியதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்:1280/2023/இ1) | |
| 37 | 834 | திருப்பூர் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்:2835/2020/பி1 நாள்:04.05.2023ல் கேட்டுக்கொண்டுள்ளபடி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகத்தில் இயங்கி வரும் கணணிகளுக்கான UPS சாதனங்களில் ஆண்டு பராமரிப்பு மற்றும் பழுது சரி செய்யும் பணிகளை இந்நகராட்சியின் பொது நிதியின் செலவினங்கள் மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட அலுவலகத்தில் உள்ள 5KVA, 2KVA 2Nos, 3KVA 2Nos, UPS களை வருடாந்திர பராமரிப்பு மற்றும் பழுது பணிகளை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.97,000/- செலவினத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:மேற்கண்ட செலவினத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண் 1276/2023/இ1) | அனுமதிக்கப்பட்டது |
| 38 | 835 | உடுமலைப்பேட்டை நகராட்சியில் நமக்கு நாமே திட்டம் 2022-2023ன் கீழ் உரிய இலக்கு விதிக்கப்பட்ட தொகை ரூ.46.43 இலட்சம் ஆகும். அதில் மீதமுள்ள தொகை ரூ.0.50 இலட்சம் தொகைக்கு வார்டு எண் 28ல் உள்ள கங்காதரன் லே அவுட் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி வளாகம் முன்புறம் சிறுபாலம் அமைக்கும் பணிக்கு பொதுமக்கள் பங்களிப்பு தொகை ரூ.0.17 இலட்சம், நமக்கு நாமே திட்டம் 2022-23ன் கீழ் ரூ.0.33 இலட்சத்திற்கு அனுமதி வேண்டி கருத்துரு | அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr><td></td><td></td><td>சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்ற விபரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்:5590/2023/இ1)</td><td></td></tr>
<tr><td>39</td><td>836</td><td>உடுமலைப்பேட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 20-ல் உள்ள M.P நகர், வார்டு எண் 28-ல் உள்ள அன்னபூரணி நகர் மற்றும் வார்டு எண் 32-ல் உள்ள குமரன் நகர் ஆகிய மூன்று பகுதிகளில் பசுமைப் பூங்கா அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.85.00 இலட்சத்திற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை, அவர்களுக்கு நிர்வாக அனுமதி வேண்டி கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்ற விபரம் மன்றத்தின் பார்வைக்கு.<br>அலுவலகக்குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்:1624/2023/இ1)</td><td>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>40</td><td>837</td><td>உடுமலைப்பேட்டை நகராட்சி நூற்றாண்டு விழா திட்டப் பணிகள் 2020-21 ன் கீழ் 8 பணிகளுக்கு நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது அதில் தங்கம்மாள் ஓடை மற்றும் கழுத்தறுத்தான் பள்ளம் ஆகிய 2 பணிகளுக்கு திருத்திய மதிப்பீடு (Revised Estimate) தயார் செய்யப்பட்டுள்ளது. அதில் மீதமுள்ள ரூ.8.80 கோடிக்கு நகராட்சியில் 1 முதல் 33 வார்டுகளில் கீழ்கண்ட பகுதிகளுக்கு மழைநீர் வடிகால்கள் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணிக்கு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது.
<table>
<tr><th>வ. எண்</th><th>பணியின் பெயர்</th><th>மதிப்பீட்டு தொகை (ரூ. இலட்சத்தில்)</th></tr>
<tr><td>1</td><td>வார்டு எண் 1ல் பாரி வீதி,சுபாஷ் வீதி மற்றும் செஞ்சேரி வீதி ஆகிய வீதிகளில் மழைநீர் வடிகால் அமைத்து சிறுபாலம் கட்டும் பணி.</td><td>25.00</td></tr>
<tr><td>2</td><td>வார்டு எண் 2ல் கண்ணுசாமி லேஅவுட்,அவணாண்டீஸ்வரர் லேஅவுட்,அர்பன் பேங்க் காலனி, மகாலட்சுமி நகர் மற்றும் ஆகிய வீதிகளில் மழைநீர் வடிகால் அமைத்து சிறுபாலம் கட்டும் பணி.</td><td>35.00</td></tr>
<tr><td>3</td><td>வார்டு எண் 3ல் குறிஞ்சி நகர் பிரதான சாலை, வேலன் நகர் சந்தோஷ் நகர் மற்றும் குறிஞ்சி நகர் குறுக்கு தெரு</td><td>35.00</td></tr>
</table></td><td>பார்வைக்கு வைக்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.</td></tr>
</table>

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | ஆகிய வீதிகளில் மழைநீர் வடிகால் அமைத்து சிறுபாலம் கட்டும் பணி. | | | |
| | | 4 | வார்டு எண் 4ல் தாராபுரம் ரோடு முதல் யு.எஸ்.எஸ் காலனி வரை மழைநீர் வடிகால் அமைத்து சிறுபாலம் கட்டும் பணி. | 25.00 | | |
| | | 5 | வார்டு எண் 5 காந்தி நகர் பிரதான சாலை (சீனிவாச ஸ்கூல் ரோடு முதல் ஐஸ்வர்யா நகர் விரிவு வரை) ஐஸ்வர்யா நகர் விரிவு பகுதியில் மழைநீர் வடிகால் அமைத்து சிறுபாலம் கட்டும் பணி. | 35.00 | | |
| | | 6 | வார்டு எண் 6ல் கல்யாணியம்மாள் லேஅவுட் பிரதான சாலை மற்றும் கல்யாணியம்மாள் லேஅவுட் குறுக்கு தெரு ஆகிய வீதிகளில் மழைநீர் வடிகால் அமைத்து சிறுபாலம் கட்டும் பணி. | 20.00 | | |
| | | 7 | வார்டு எண் 6 ல் உள்ள கல்யாணியம்மாள் லேஅவுட் குறுக்கு தெரு முதல் அண்ணாகுடியிருப்பு பிரதான சாலை வரை மழைநீர் வடிகால் அமைத்து சிறுபாலம் கட்டும் பணி | 40.00 | | |
| | | 8 | வார்டு எண் 10ல் உள்ள ஆண்டாள் சீனிவாசன் லேஅவுட் குறக்கு தெரு மற்றும் சர்தார் வீதி விரிவு ஆகிய வீதிகளில் மழைநீர் வடிகால் அமைத்து சிறுபாலம் கட்டும் பணி. | 30.00 | | |
| | | 9 | வார்டு எண் 11ல் உள்ள சத்திரம் வீதி, சீனிவாச வீதி முதல் தளி ரோடு வரை ஆகிய வீதிகளில் மழைநீர் வடிகால் அமைத்து சிறுபாலம் கட்டும் பணி. | 35.00 | | |
| | | 10 | வார்டு எண் 12ல் உள்ள தளி ரோடு முதல் பொள்ளாச்சி பழனி ரோடு வரை மழைநீர் வடிகால் அமைத்து சிறுபாலம் கட்டும் பணி. | 50.00 | | |
| | | 11 | வார்டு எண் 13ல் உள்ள வி.ஜி.ராவ் நகர் 6வது வீதி, யு.கே.சி நகர் 1வது வீதி, | 50.00 | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | யு.கே.சி நகர் 9வது வீதி மற்றும் 10வது வீதி, ஆகிய வீதிகளில் மழைநீர் வடிகால் அமைத்து சிறுபாலம் கட்டும் பணி. | | | |
| | | 12 | வார்டு எண் 14ல் உள்ள யு.கே.சி நகர் 13வது வீதி, யு.கே.சி நகர் 14வது வீதி , யு.கே.சி நகர் 4வது வீதி மற்றும் யு.கே.சி நகர் 8வது வீதி ஆகிய வீதிகளில் மழைநீர் வடிகால் அமைத்து சிறுபாலம் கட்டும் பணி. | 50.00 | | |
| | | 13 | வார்டு எண் 15ல் உள்ள எம்.பி நகர், சந்ரோதயா கார்டன் பிரதான சாலை ஆகிய வீதிகளில் மழைநீர் வடிகால் அமைத்து சிறுபாலம் கட்டும் பணி. | 35.00 | | |
| | | 14 | வார்டு எண் 16ல் உள்ள பெரியகடை வீதி, பி.வி கோவில் ஆகிய வீதிகளில் மழைநீர் வடிகால் அமைத்து சிறுபாலம் கட்டும் பணி. | 35.00 | | |
| | | 15 | வார்டு எண் 17ல் உள்ள சதாசிவம் வீதி, மழைநீர் வடிகால் அமைத்து சிறுபாலம் கட்டும் பணி. | 25.00 | | |
| | | 16 | வார்டு எண் 18ல் உள்ள பசுபதி வீதி, சரவணா வீதி, கச்சேரி வீதி மற்றும் கல்பனா ரோடு ஆகிய வீதிகளில் மழைநீர் வடிகால் அமைத்து சிறுபாலம் கட்டும் பணி. | 25.00 | | |
| | | 17 | வார்டு எண் 19ல் உள்ள பள்ளிவாசல் வீதி, தளி ரோடு ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால் அமைத்து சிறுபாலம் கட்டும் பணி | 35.00 | | |
| | | 18 | வார்டு எண் 20ல் உள்ள சந்ரோதயா கார்டன் 6வது வீதி, 7வது வீதி, 8வது வீதி, 9வதுவீதி மற்றும் சந்ரோதயா கார்டன் 2வது குறுக்கு ரோடு ஆகிய வீதிகளில் மழைநீர் வடிகால் அமைத்து சிறுபாலம் கட்டும் பணி. | 40.00 | | |
| | | 19 | வார்டு எண் 21ல் உள்ள சிங்கப்பூர் நகர், சிங்கப்பூர் நகர் குறுக்கு தெரு ஆகிய | 25.00 | | |

| | | |
|---|---|---|
| | பகுதிகளில் மழைநீர் வடிகால் அமைத்து சிறுபாலம் கட்டும் பணி. | |
| 20 | வார்டு எண் 22ல் உள்ள பத்ரகாளியம்மன் லேஅவுட், பத்ரகாளியம்மன் லேஅவுட் குறுக்கு தெரு ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால் அமைத்து சிறுபாலம் கட்டும் பணி. | 25.00 |
| 21 | வார்டு எண் 23ல் உள்ள சங்கிலி வீதி மற்றும் சங்கிலி வீதி குறுக்கு தெரு மழைநீர் வடிகால் அமைத்து சிறுபாலம் கட்டும் பணி. | 25.00 |
| 22 | வார்டு எண் 24ல் உள்ள நேரு வீதி மற்றும் நேரு வீதி விரிவு ஆகிய வீதிகளில் மழைநீர் வடிகால் அமைத்து சிறுபாலம் கட்டும் பணி. | 30.00 |
| 23 | வார்டு எண் 25ல் உள்ள செல்லமுத்து வீதி, நக்கீரர் வீதி ஆகிய வீதிகளில் மழைநீர் வடிகால் அமைத்து சிறுபாலம் கட்டும் பணி. | 30.00 |
| 24 | வார்டு எண் 26ல் கிழக்கு பகுதியில் உள்ள டி.வி பட்டிணம் வீதி முதல் நெடுஞ்செழியன் காலனி பள்ளம் வரை ஆகிய வீதிகளில் மழைநீர் வடிகால் அமைத்து சிறுபாலம் கட்டும் பணி. | 25.00 |
| 25 | வார்டு எண் 27ல் மேற்கு பகுதியில் உள்ள டி.வி பட்டிணம் வீதி முதல் நெடுஞ்செழியன் காலனி பள்ளம் வரை ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால் அமைத்து சிறுபாலம் கட்டும் பணி . | 25.00 |
| 26 | வார்டு எண் 28 மற்றும் 29ல் கோமதி நகர் (நெடுஞ்செழியன் காலனி பள்ளம் முதல் சாய்ராம் லேஅவுட் சந்திப்பு வரை) ஆகிய வீதிகளில் மழைநீர் வடிகால் அமைத்து சிறுபாலம் கட்டும் பணி | 25.00 |

| | | |
|---|---|---|
| 27 | வார்டு எண் 30ல் பி.ஏ நகர், முத்தையா கந்தசாமி லேஅவுட், கூட்செட் ரோடு ஆகிய வீதிகளில் மழைநீர் வடிகால் அமைத்து சிறுபாலம் கட்டும் பணி. | 25.00 |
| 28 | வார்டு எண் 31ல் இராமசாமி நகர் பிரதான சாலை (ராமசாமி E வகை வீதி முதல் எம்,ஜி,ஆர் நகர் ஓடை வரை) மழைநீர் வடிகால் அமைத்து சிறுபாலம் கட்டும் பணி. | 20.00 |
| 29 | வார்டு எண் 32ல் ருத்ரப்பா நகர் பிரதான சாலை மழைநீர் வடிகால் அமைத்து சிறுபாலம் கட்டும் பணி. | 25.00 |
| 30 | வார்டு எண் 33ல் இராமசாமி நகர் பிரதான சாலை (லட்சுமியம்மாள் லே அவுட் முதல் எம்.ஜி.ஆர் நகர் ஓடை வரை ) ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால் அமைத்து சிறுபாலம் கட்டும் பணி. | 25.00 |
| | **மொத்தம் ரூ.** | 930.00 |

மேற்கண்டவாறு ரூ.930.00 இலட்சத்தில் ரூ.878.00 இலட்சத்தினை நூற்றாண்டு நிதியிலிருந்தும் மீதமுள்ள ரூ.52.00 இலட்சத்தினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்க கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்ற விபரம் மன்றத்தின் பார்வைக்கு.

அலுவலகக்குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்:1987/2020/இ1)

(ஒப்பம்) மு. மத்தீன்,
நகரமன்றத்தலைவர்

ஆணையாளர்,
உடுமலைப்பேட்டை நகராட்சி